மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதையில் டீசல் என்ஜின் மூலம்

# ஏ.ஜி-டி.எம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை 2-வது பாதையில் சோதனை ஓட்டம்

## வெற்றிகரமாக நடந்ததாக அதிகாரிகள் தகவல்

சென்னை, செப்.5- மெட்ரோ ரெயில் சேவைக்காக ஏ.ஜி-டி. எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரை 9.5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட 2-வது சுரங்கப் பாதையில் டீசல் என்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடந்தது.

### மெட்ரோ ரெயில் சேவை

சென்னை, சென்டிரல்-வண்ணாரப்பேட்டை இடையே 9.5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட மெட்ரோ ரெயில் பாதைக்கான பணிகள் நிறைவடைந்து உள்ளன. இதனைதொடர்ந்து கடந்த மாதம் 24-ந் தேதி முதல் சுரங்கப்பாதையில் டீசல் என்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடந்தது. தொடர்ந்து 2-வது சுரங்கப்பாதையில் நேற்று காலை சோதனை ஓட்டம் நடைபெற்றது.

ஏ.ஜி-டி.எம்.எஸ். ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட டீசல் என்ஜின், ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம் ரெயில் நிலையங்கள் வழியாக சென்டிரலில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. அந்த என்ஜின் கூவம் ஆறுக்கு கீழே சுமார் 100 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள 2-வது சுரங்கப்பாதை வழியாக சென்டிரல் ரெயில் நிலையத்தின் கீழே (லோயர் லெவல்) வந்தது, குறிப்பிடத்தக்கது. பின்னர் அங்கிருந்து ஐகோர்ட்டு, மண்ணடி ரெயில் நிலையங்கள் வழியாக வண்ணாரப்பேட்டைக்கு அந்த டீசல் என்ஜின் சென்றது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

### சோதனை ஓட்டம்

ஒப்பந்தக்காரர்களால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அண்ணாசாலையில் மெட்ரோ ரெயில் பணிகள் ஒரு சில ஆண்டுகள் கிடப்பில் கிடந்தது. இதற்கிடையில் மாற்றுப்பாதைகளில் சென்று வந்த வாகன ஓட்டிகள் அண்ணாசாலையில் மெட்ரோ ரெயில் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். பணிகள் தொடங்கப்பட்டு ஆண்டுகள் பல உருண்டோடிய நிலையில் மாற்று ஒப்பந்தக்காரர்கள் மூலம் பணியை மெட்ரோ ரெயில் நிறுவனம் தொடர்ந்து நிறைவேற்றி தற்போது அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்துள்ளது.

தற்போது அண்ணாசாலையில் உள்ள ஏ.ஜி-டி.எம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை இடையே டீசல் என்ஜின் மூலம் 2-வது சுரங்கப்பாதையில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டு உள்ளது.

### டிசம்பரில் போக்குவரத்து

இந்த சோதனை ஓட்டத்தின் போது சுரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு கருவிகள், தண்டவாளத்துக்கும் பிளாட்பாரத்திற்கும் இடையே அமைக்கப்பட்டுள்ள ஸ்டீல் டோர்கள், சிக்னல்கள் ஆய்வு செய்யப்பட்டன.

தொடர்ந்து ஒரு சில வாரங்களில் இந்தப்பாதையில் மெட்ரோ ரெயிலையும் இயக்கி சோதனை செய்ய உள்ளோம். இம்மாத இறுதியில் பாதுகாப்பு கமிஷனர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு பயணிகள் ரெயிலை இந்தப்பாதையில் இயக்க சான்றிதழ் வாங்க திட்டமிடப்பட்டு இருக்கிறது. இதையடுத்து இந்த ஆண்டு இறுதியில் ஏ.ஜி-டி. எம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை இடையே பயணிகள் ரெயில் இயக்கப்படும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.